தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 02.07.2013

### கோயம்பேடில் காய்கறிகளின் விலை குறைந்தது



கோயம்பேடு மார்க்கெட்டில் அவரை, உருளைக் கிழங்கு, பீன்ஸ் சாம்பார் வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை வெகுவாக குறைந்துள்ளது.

சாம்பார் வெங்காயத்தின் விலை பாதியாக குறைந்துள்ளது. அதுபோல் அவரை வெண்டை, உருளைக் கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ. 15 வரை விலை குறைந்துள்ளது.

கோயம்பேடில் விலை குறைந்தாலும் பல சில்லறை விற்பனைக் கடைகளில் பழைய விலைக்கே விற்கப்படுவதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். அரசு சார்பில் நடத்தப்படும் பண்ணை பசுமைக் கடைகளிலும் (மலிவு விலை காய்கறி கடைகள்) கூட ஒரு சில காய்கறிகள் கோயம்பேடு மார்க்கெட்டை விட சற்று விலை அதிகமாக விற்கப்படுகிறது. இந்த ஆண்டு காய்கறிகளின் விளைச்சல் குறைந்ததையடுத்து சில இடைத்தரகர்கள் வெங்காயம் போன்ற சில

அத்தியாவசிய காய்கறிகளை பதுக்கி வைத்தனர். இதன் விளைவாக மார்க்கெட்டில் காய்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை உயர்ந்தது.

இதைக் கருத்தில் கொண்டு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 29 மலிவு விலை காய்கறிக் கடைகளையும், 2 நடமாடும் காய்கறி விற்பனை வாகனங்களையு தமிழக முதல்வர் அண்மையில் தொடங்கி வைத்தார்.

அரசு மலிவு விலைக் காய்கறிக் கடைகளுக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இதையடுத்து இடைத் தரகர்கள் பதுக்கி வைத்திருந்த பல பொருள்கள் சந்தைக்கு வரத் தொடங்கின.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் ரூ.120-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சாம்பார் வெங்காயம், மலிவு விலைக் காய்கறிக் கடைகளின் வரவால் தற்போது ரூ.60-ஆகக் குறைந்துள்ளது. அரசு மலிவு விலைக் காய்கறிக் கடைகளுக்கு நாளொன்றுக்கு 15 லிருந்து 20 டன் காய்கறிகள் வருகின்றன. சுமார் ரூ.20 லட்சம் முதல் 25 லட்சம் வரை விற்பனை நடைபெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விலை குறைவுக்கு காரணம்:கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறிகளின் வரத்து கடந்த வாரத்தில் இருந்து அதிகரித்துள்ளதால் அங்கு விலை குறைவாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விளைச்சல் குறைவு மற்றும் பதுக்கல் காரணமாக 5,250 டன் காய்கறிகள் வரவேண்டிய கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கடந்த மாதத்தில் 2,250 டன் காய்கறிகள் மட்டுமே வந்தன. மலிவு விலைக் கடைகளின் வரவுக்குப் பின் கோயம்பேடுக்கு தற்போது காய்கறி வரத்து அதிகரித்துள்ளது.

இதைத் தவிர ஒரு சில காய்கறிகள் கோயம்பேடு மார்க்கெட்டிலிருந்தான் மலிவு விலைக் கடைகளுக்கு செல்கின்றன. இதன் காரணமாகவே கோயம்பேடில் விலை குறைவாக உள்ளதாகக் கூறுகின்றனர் வியாபாரிகள்.

இங்கு உருளைக் கிழங்கு, சேனைக்கிழங்கு, பீன்ஸ், கேரட், பச்சை மிளகாய், முட்டை கோஸ், பீட்ரூட், செப் செப், வெள்ளரிக்காய், பாகற்காய், கோவைக்காய்,

முள்ளங்கி, அவரை, வெண்டை உள்ளிட்ட காய்கறிகளின் விலை மலிவு விலைக் கடைகளை விட றவாக உள்ளது. தக்காளி, கருணை கிழங்கு, முருங்கைக்காய், வாழைக்காய், தேங்காய், இஞ்சி, கொத்தமல்லி உள்ளிட்டவை ரூ.5 லிருந்து ரூ.10 வரை பசுமை பண்ணைக் கடைகளில் விலை குறைவாக விற்கப்படுகின்றன.

**பசுமைக் கடைகளில் விலை குறைப்பு**

பண்ணை பசுமைக் கடைகளில் செவ்வாய்க்கிழமை முதல் பீன்ஸ் ரூ.50-லிருந்து ரூ.40-க்கும் அவரை ரூ.40-லிருந்து ரூ.35-க்கும் விலை குறைக்கப்படவுள்ளதாக கூட்டுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேசனல் ஸ்பாட் எக்ஸ்சேஞ்ச் எனப்படும் தேசிய உடனடி சந்தையின் மூலம் மலிவு விலைக் கடைகளுக்கு வெங்காயம், இஞ்சி, உருளைக்கிழங்கு போன்றவை கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலிவு விலைக் கடைகளில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க கூடுதலாக பில்லிங் கருவிகள் வைக்கப்படவுள்ளன. மலிவு விலைக் கடைகளில் தற்போது மொத்தம் 35 பில்லிங் கருவிகள் உள்ளன. இவற்றை 65- ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**வாழையில் தண்டு துளைப்பான் பாதிப்பை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு பயிற்ச**

உத்தமபாளையம் அருகே கோகிலாபுரத்தில், வாழையில் தண்டு துளைப்பான் பாதிப்பை ஊசி மூலம் மருந்தை உட்செலுத்தி கட்டுப்படுத்தும் முறை குறித்து பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் விவசாயிகளுக்கு செயல் விளக்கப் பயிற்சி அளித்தனர்.

உத்தமபாளையம் ஒன்றியத்தில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசியர்கள் விஜயசாமுண்டீஸ்வரி, உஷாராணி ஆகியோர் தலைமையில் மாணவிகள் பூங்குழலி, பிரதீபா, பிரீத்தி, புஷ்பலதா, ராகப்பிரியா, ராஜகாளீஸ்வரி, ரம்யா, ரோஜா ஆகியோர் முகாமிட்டு விசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்கப் பணிகள் குறித்து பயிற்சி அளித்து வருகின்றனர்.

கோகிலாபுரத்தில் வாழையில் தண்டு துளைப்பான் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு, 150 மில்லி மோனோகுரோட்டோபாஃபஸ 350 மில்லி தண்ணீரில் கலந்து, ஒரு மரத்துக்கு 5 மில்லி எடுத்து, ஊசி மூலம் உட்செலுத்தி கட்டுப்படுத்தும் முறை குறித்து விசாயிகளுக்கு மாணவிகள் பயிற்சி அளித்தனர். வாழை குலைதள்ளும் பருவத்தில் ஊசி மூலம் மருந்து உட்செலுத்தும் முறையை கையாளக் கூடாது என்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

**வேளாண்மைப் பல்கலைக்கழக கலந்தாய்வு தொடக்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை தொடங்கிய இளநிலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் 204 இடங்கள் நிரம்பின. இதில் 178 பேர் பி.எஸ்சி. வேளாண்மைப் பாடப் பிரிவைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இளநிலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு திங்கள்கிழமை தொடங்கியது. தமிழக வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன், மாணவர் சேர்க்கை கலந்தாய்வைத் தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி, பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை செயலாளர் ஏ.ராஜராஜன், சுதாகர் உள்பட பலர் பங்கேற்றனர்.

பல்கலைக்கழகத்தில் உறுப்புக் கல்லூரிகள், இணைப்புக் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளில் 12 பாடப் பிரிவுகளுக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களின் எண்ணிக்கை 1330 ஆகும். இதுதவிர சுயநிதி பிரிவின் கீழ் 290 இடங்களில் மாணவ, மாணவிகள் சேரலாம்.

திங்கள்கிழமை காலை 199.75 முதல் 195.75 வரையிலான கட் ஆஃப் மதிப்பெண் பெற்ற 211 பேருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதில் 81 பேர் கலந்தாய்வில் கலந்து கொண்டனர்.

பி.எஸ்சி. வேளாண்மை, பி.எஸ்சி. தோட்டக்கலை, பி.எஸ்சி. வனவியல் படிப்பு உள்பட பல்வேறு பட்டப் படிப்புகளில் சேர 80 பேருக்கு அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது.

இதில் 198.25 கட் ஆஃப் மதிப்பெண் பெற்ற மாணவிகள் திருப்பூர் மாவட்டம் உடுமலையைச் சேர்ந்த கே.இந்திரா பிரியதர்ஷினி, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சந்தியா ஆகியோர் பி.எஸ்சி. வேளாண்மை படிப்பைத் தேர்ந்தெடுத்தனர்.

அதேபோல 197.75 மதிப்பெண் பெற்ற மாணவிகள் நாமக்கல்லைச் சேர்ந்த ஆர்.இந்து, ஏ.அபிநயா, ஆர்.நவீனா ஆகிய மூன்று பேரும் பி.எஸ்சி. வேளாண்மை படிப்பைத் தேர்ந்தெடுத்தனர்.

இதுகுறித்து, மாணவி கே.இந்திரா பிரியதர்ஷினி கூறியது: நான் பி.எஸ்சி. வேளாண்மை பாடப் பிரிவைப் படித்து, சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி ஐ.ஏ.எஸ். படிக்க விரும்புகிறேன். நான் ஐ.ஏ.எஸ். படித்து மாவட்ட ஆட்சியராக வேண்டும் என்பது எனது தந்தையின் விருப்பம் ஆகும்.

எனவே, பி.எஸ்சி. வேளாண்மை பாடப் பிரிவைத் தேர்ந்தெடுத்துள்ளேன். இதற்காக பி.இ. மற்றும் எம்.பி.பி.எஸ். கலந்தாய்வில் கலந்து கொள்ளவில்லை. எம்.பி.பி.எஸ்.

கிடைக்கும் வாய்ப்பிருந்தும் கலந்தாய்வில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

பிற்பகலில் நடைபெற்ற கலந்தாய்வில் 195.50 முதல் 194.50 வரையிலான கட் ஆஃப் மதிப்பெண் பெற்ற 222 பேருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இதில் 130 பேர் கலந்தாய்வில் கலந்து கொண்டனர். 124 பேர் பல்வேறு பாடப் பிரிவுகளை தேர்ந்தெடுத்தனர்.

முதல்நாள் கலந்தாய்வின் முடிவில் 204 பேருக்கு அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது. இதில் 178 பேர் பி.எஸ்சி. வேளாண்மை படிப்பைத்

தேர்ந்தெடுத்துள்ளனர். மாணவர் சேர்க்கை கலந்தாய்வு ஜூலை 9ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெற உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இயற்கை பேரிடர்களை சமாளிக்க கொள்கை மாற்றம் தேவை என இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ஐ.சி.ஏ.ஆர்.) பயிரியல் துறை துணை இயக்குநர் ஜெனரல் ஸ்வப்பன் குமார் தத்தா வலியுறுத்தினார்**

இயற்கை பேரிடர்களை சமாளிக்க கொள்கை மாற்றம் தேவை என இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ஐ.சி.ஏ.ஆர்.) பயிரியல் துறை துணை இயக்குநர் ஜெனரல் ஸ்வப்பன் குமார் தத்தா வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 43-வது நிறுவன நாள் விழா திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், ஸ்வப்பன் குமார் தத்தா பேசியது:

உத்தரகண்ட் மாநிலத்தில் கடுமையான இயற்கைப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள கொள்கை அளவில் மாற்றம் அவசியம்.

சிம்லா, டார்ஜிலிங் போன்ற மலைப் பகுதிகளிலும் இதுபோன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் சூழல் உள்ளது.

நாம் இயற்கையை சாடுவதை விட்டுவிட்டு, நம்முடையை இயற்கைப் பேரிடர் மேலாண்மை குழுவை மேம்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே ஏற்பட்ட பேரிடர் நிகழ்வுகளில் இருந்து பாடம் கற்க தவறிவிட்டோம். தொடர் பேரழிவு நிகழ்வுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இதுபோன்ற இயற்கைப் பேரழிவுகளை போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் தவிர்க்க முடியும். உத்தரகண்ட் சம்பவத்திற்கு பருவநிலை மாற்றம்தான் காரணம் என்று முற்றிலும் கூறிவிட முடியாது.

மேலும், வெள்ளப்பெருக்கு காலங்களில் போதிய நீர் மேலாண்மை கொள்கை மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் உபரி நீரை விவசாயத்துக்கு பயன்படுத்துவது தொடர்பான நீர் மேலாண்மை திட்டத்தை கட்டாயம் உருவாக்க வேண்டும். இதன்மூலம் 30 சதவீத அளவுக்கு வேளாண் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். இதுபோன்ற தொலைநோக்கு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இதற்கான ஆராய்ச்சியில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்றார்.

விழாவில் தமிழக வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன், பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி உள்பட பலர் பேசினர்.

**பவானிசாகர் நீர்மட்டம் 60.68 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 60.68 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,476 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 7.47 டி.எம்.சி.,

**நவீன வேளாண் தொழில்நுட்ப செயல் விளக்க முகாம்**

கோபி குள்ளம்பாளையம் கிராமத்தில் நவீன வேளாண் தொழில்நுட்ப செயல் விளக்க முகாம் நடைபெற்றது.

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில், வேளாண்மை இளங்கலை இறுதியாண்டு பயிலும் மாணவியர், கிராம தங்கல் திட்டத்தின்கீழ் கடந்த ஒரு மாதமாக கோபி வட்டாரத்தில் களப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

குள்ளம்பாளையம் கிராமத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சாகுபடி குறித்த பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலமாக இவர்கள் செய்து காண்பித்தனர். குள்ளம்பாளையம் ஊராட்சித் தலைவர்

ஜெகநாதன் தலைமை வகித்தார். மாணவி ஆ.தரணிப்பிரியா வரவேற்றார். கோபி வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி முன்னிலை வகித்து சொட்டு நீர்ப் பாசனம், செம்மை கரும்பு சாகுபடி மற்றும் திருந்திய நெல் சாகுபடி உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள், மானியத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

வேளாண் விற்பனைத் துறை அலுவலர் கார்த்திகேயன், கொப்பரைத் தேங்காய் அட்டை பெறும் வழிமுறைகள் மற்றும் வேளாண் பொருள்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்யும் உத்திகள் குறித்து தெரிவித்தார். இதில், நன்மை செய்யும் பூஞ்சானம் மூலமாக விதை நேர்த்தி செய்தல், நூற்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த வாழை விதைக் கிழங்கு நேர்த்தி செய்தல், மஞ்சள் விதைக் கிழங்கு நேர்த்தி, துவரை நடவு செய்தல், கரும்பு விதைக் கரணை நேர்த்தி, நவீன முறையில் பழக்கூழ் செய்தல் உள்ளிட்ட பல்வேறு செயல் விளக்கங்களை மாணவிகள் செய்து காண்பித்தனர்.

மாணவிகள் சா.பரணி, பா.சிசிலியா கார்மல், பா.ராகவி, ஆ.தரணிப்பிரியா, சு.பிரியங்கா, ல.இந்து மீனா, கே.கே.லூலூ கலந்து கொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களை அளித்தனர்.

இந்த செயல்விளக்க முகாமில் குள்ளம்பாளையம், கங்கம்பாளையம், நாதிபாளையம், வெள்ளாளபாளையம், பொலவக்காளிபாளையம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் நீர்மட்டம் 42 அடியை எட்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 42.10 அடியாக உயர்ந்தது. கடந்த 6 நாள்களில் அணையின் நீர்மட்டம் 27 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த தொடர் மழையால் அங்குள்ள அணைகள் நிரம்பின. இதையடுத்து, கபினி அணையிலிருந்து உபரிநீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது.

இதனால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கடந்த 25-ஆம் தேதி மேட்டூர் அணைக்கு நொடிக்கு 80 கன அடி அளவில் இருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 30) அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 38,547 கன அடியாக இருந்தது. ஜூன் 25ஆம் தேதி 15.51 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 42.10 அடியாக உயர்ந்தது. கடந்த 6 நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 26.59 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால், கபினி அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 33,419 அடியாகக் குறைந்தது. நீர்வரத்து குறைந்தாலும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அணையின் நீர்இருப்பு திருப்திகரமான நிலையை எட்டினால், காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளது. வழக்கமாக அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருந்தால், பருவமழையை எதிர்நோக்கி காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும். பிலிகுண்டுலுவில் 13,000 கன அடி நீர்வரத்து: கபினி அணையில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் திங்கள்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,000 கன அடியாகக் குறைந்தது.

தடை நீக்கப்படுமா?

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தருமபுரி மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

தற்போது தண்ணீர் வரத்து குறைந்துள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் தடையை நீக்க வேண்டும் என தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**பாசன வாய்க்கால்களை தூர்வார விவசாயிகள் வலியுறுத்தல்**

கரூர் மாவட்டம், புகளூர் பகுதி விவசாயத்துக்கு நீர் ஆதாரமான வாய்க்கால்களைத் தூர்வார விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து கரூரில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் நாள் கூட்டத்தில்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் எம். குருநாதன் தலைமையில் விவசாயிகள் அளித்த மனு:

புகளூர் பகுதி விவசாயத்துக்கு நீர் ஆதாரமான புகளூர் வாய்க்கால், பல்ல வாய்க்கால், வாங்கல் வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலம் வறண்டு பாலைவனமாக உள்ளது.

இந்த வாய்க்கால்கள் பல ஆண்டுகளாகத் தூர்வாரப்படாமல் முள்புதர் மண்டி தண்ணீர் செல்ல முடியாத நிலையில் உள்ளது.

காவரியில் தண்ணீர் வரும் காலங்களில் மட்டும் மேற்படி வாய்க்கால்களில் நீர் வரப்பெற்று பாசனம் நடைபெறும்.

இப்போது பவானி ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து காளிங்கராயன் வாய்க்காலில் நீர்வரத்து உள்ள நிலையில், வடிநீர் புகளூர் வாய்க்கால் தலைப்பு முதல், கடைமடை வரை செல்ல போர்க்கால அடிப்படையில் தூர்வார மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இப்போது தூர்வாரா விட்டால், புகளூர் வாய்க்காலில் உள்ள ஏழு உடைப்புகளின் வழியாக தண்ணீர் வீணாகச் சென்று காவிரியில் கலந்துவிடும். விவசாயிகளுக்கும் பயனற்றதாகிவிடும்.

புகழூர் வாய்க்காலில் கடைமடை வரை தண்ணீர் சென்றால்தான் விவசாயத்துக்கும், குடிநீர் ஆதாரத்துக்கும் வழிகிடைக்கும்.

தொகுப்பு வீடுகளில் மராமத்து தேவை: நெய்தலூர் ஊராட்சி இந்திரா நகரைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்த மனு:

நெய்தலூர் ஊராட்சியில் இந்திரா நகரில் ஆதிதிராவிட நலத் துறை சார்பில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் 52 தொகுப்பு வீடுகள் கட்டி பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டது.

இந்த வீடுகள் அனைத்தும் இப்போது மக்கள் வசிக்க முடியாமல், மேற்கூரை இடிந்தும், சுவர்கள் சேதமாகியும் பயனற்றதாக உள்ளன.

இங்கு குழந்தைகளுடன் வசிக்கப் பயமாக உள்ளது. இதில் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு, வீடுகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 43.15 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 43.15 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 21,019 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 1,008 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயத்துக்கு தண்ணீர் கேட்டு ஆட்சியரிடம் மனு**

பாளையங்கோட்டை அருகே நடுவக்குறிச்சி உடையார்குளம் பகுதியில் விவசாயத்துக்கு கால்வாயில் தண்ணீர் வழங்க கோரி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தியிடம் விவசாயிகள் திங்கள்கிழமை கோரிக்கை மனு அளித்தனர்.

விவசாயிகள் அளித்த மனு:

நடுவக்குறிச்சி உடையார்குளம் பகுதியில் கால்வாய் பகுதிகளுக்கு தண்ணீர் வரத்து சரிவர இல்லாததால் கடந்த 12 ஆண்டுகளாக விவசாயம் நடைபெறவில்லை. பாளையங்கால்வாயில் தண்ணீர் திறந்தும் எந்தப் பயனும் இல்லை.

பாபநாசம் அணையில் 35 அடி நீர்மட்டம் இருந்த காலத்திலும் விவசாயம் செய்திருக்கிறோம். ஆனால், இப்போது 115 அடி நீர்மட்டம் உள்ளபோதும் இப்பகுதிக்கு தண்ணீர் கிடைக்காமல், விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறோம்.

மேலும், கால்நடைகளுக்கு குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்காமல் உள்ளது. பாளையங்கால்வாயில் ரூ.7 லட்சம் செலவில் தூர்வாரும் பணி நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மடைகளை சரியான முறையில் சீர் செய்யவில்லை என்பதால் நடுவக்குறிச்சி உடையார்குளம் பகுதிக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. நடுவக்குறிச்சியை அடுத்து வாகைகுளம், அரியகுளம், நொச்சிகுளம் என்று 5 கி.மீ. தொலைவுக்கு தண்ணீர் செல்ல வேண்டியுள்ளது. எனவே, நடுவக்குறிச்சி உடையார்குளம் பகுதிக்கு தண்ணீர் வந்து சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பக்தர்கள் மனு: திருநெல்வேலி தச்சநல்லூர் ஸ்ரீ திரிசூலம் இசக்கியம்மன், வேம்பு ஸ்ரீ சுடலைமாடசாமி திருக்கோவில் பக்தர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் அளித்த மனு:

தச்சநல்லூர் ராமையன்பட்டி மற்றும் மேலக்கரை பகுதியில் 300 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீ திரிசூலம் இசக்கி அம்மன் மற்றும் வேம்பு ஸ்ரீ சுடலைமாடசாமி திருக்கோவில் அமைந்துள்ளன. இங்கு தினமும் காலை, மதியம், இரவு பூஜைகளும், அவ்வப்போது கொடை விழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இக் கோவில்களுக்கு மின்சார இணைப்பு கடந்த 40 ஆண்டு காலமாக உள்ளது. 23.8.2013-ம் தேதி கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இக் கோவில்களால் யாருக்கும் எவ்வித இடையூறும் இல்லை. கோவில்களின் பின்புறம் மேற்கு திசையில் ஓடை இருக்கிறது. ஓடையை சுற்றிலும் கட்டடங்கள் வந்துவிட்டதால் உபயோகம் இல்லாமல் இருக்கிறது.

இந்நிலையில் இந்தக் கோவில்களை இடிக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் நீர்மட்டம் 42 அடியை எட்டியது**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 42.10 அடியாக உயர்ந்தது. கடந்த 6 நாள்களில் அணையின் நீர்மட்டம் 27 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த தொடர் மழையால் அங்குள்ள அணைகள் நிரம்பின. இதையடுத்து, கபினி அணையிலிருந்து உபரிநீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது.

இதனால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கடந்த 25-ஆம் தேதி மேட்டூர் அணைக்கு நொடிக்கு 80 கன அடி அளவில் இருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் உயர்ந்தது.

ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 30) அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 38,547 கன அடியாக இருந்தது.

ஜூன் 25ஆம் தேதி 15.51 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 42.10 அடியாக உயர்ந்தது. கடந்த 6 நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 26.59 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால், கபினி அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்வரத்து தீங்கள்கிழமை நொடிக்கு 33,419 அடியாகக் குறைந்தது.

நீர்வரத்து குறைந்தாலும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

அணையின் நீர்இருப்பு திருப்திகரமான நிலையை எட்டினால், காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளது.

வழக்கமாக அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருந்தால், பருவமழையை எதிர்நோக்கி காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும்.

பிலிகுண்டுலுவில் 13,000 கன அடி நீர்வரத்து: கபினி அணையில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் திங்கள்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,000 கன அடியாகக் குறைந்தது.

தடை நீக்கப்படுமா?

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தருமபுரி மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

தற்போது தண்ணீர் வரத்து குறைந்துள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் தடையை நீக்க வேண்டும் என தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.07.2013**

**விவசாயிகளுக்கு குறுவை சிறப்புதொகுப்பு திட்ட பயிற்சி முகாம்**

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் உழவர் நண்பர்களுக்கான பயிற்சி மற்றும் முனைப்பு இயக்க கண்காட்சி திருவாரூரில் நடந்தது. இதில், கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் கணேசன் வரவேற்றார்.விழாவில், விவசாயிகளுக்கு உழவுக்கு மானியம், வேளாண் இடுபொருள் ஆகியவற்றை வழங்கி உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசியதாவது: முதல்வர் உத்தரவுப்படி, கண்காட்சி, பயிற்சி நடத்தப்படுகிறது.

எந்தநேரத்தில் எதை செய்தால் சரியாக இருக்கும் என்னும் நோக்கில் குறுவை சாகுபடி பணிகளை துவங்க அரசு நலத்திட்டங்களை வழங்கி முதல்வர், செயல்படுத்தி வருகிறார்.விவசாயம் முதல் விஞ்ஞானம் வரை அனைத்து துறைகளையும் முதல்வர் அறிந்துள்ளார். காவிரி பிரச்னையில் தமிழகத்துக்கு உரிய உரிமையை முதல்வர் நிலைநாட்டி தந்துள்ளார்.கல்லணையை கரிகால் சோழன் கட்டி, இரண்டாயிரம் ஆண்டு ஆனாலும் இன்று வரை கல்லணையைக் கட்டியவர் கரிகால்சோழன் என்பது மறையவில்லை. காவிரி பிரச்னையில் உரிமையை பெற்றுக் கொடுத்தவர் முதல்வர் என்பதும் என்றும் மறையாது. இதை விவசாயிகள் உணர வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார்.வேளாண்மைத்துறை துணை இயக்குனர் மயில்வாகனன் நன்றி கூறினார்.

**காய்கறிகள் வரத்து அதிகரிப்பு மார்க்கெட்டில் விலை குறைப்பு**

திண்டுக்கல்: காய்கறிகளின் வரத்து அதிகரித்திருப்பதால் அவற்றின் விலை குறைந்திருப்பதாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.
திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பருவமழை பொய்த்ததால் விளைநிலங்கள் வறண்டிருந்தன. விளைச்சல் இல்லாததால் காய்கறி வரத்து குறைந்திருந்தது. இதனால் அனைத்து காய்கறிகளின் விலையும் உச்சத்தில் இருந்தது. சமையலுக்கு தேவையான காய்கறிகளை போதுமான அளவிற்கு வாங்கமுடியாமல் நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டனர்.
தற்போது ஓரளவிற்கு காய்கறிகள் மார்க்கெட்டிற்கு வரத்துவங்கியுள்ளன. இதனால் காய்கறிகளின் விலை குறைக்கப்பட்டிருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.
திண்டுக்கல் காந்தி மொத்த மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை விபரம் வருமாறு: சின்ன வெங்காயம் கிலோ ரூ. 50, பல்லாரி ரூ. 25, தக்காளி ரூ. 40, முட்டை கோஸ், உருளை கிழங்கு, கேரட் தலா ரூ. 20, பீன்ஸ் ரூ. 35, நூக்கல் ரூ. 15, இஞ்சி ரூ. 200, பட்டர் பீன்ஸ் ரூ. 60, சேனை ரூ. 25, முருங்கை காய் ரூ. 30, வெண்டைக்காய் ரூ.10, கத்திரிக்காய் ரூ. 15, புடலங்காய் ரூ. 25, அவரைக்காய் ரூ. 35, பச்சை மிளகாய் ரூ. 35 க்கு விற்கப்பட்டன. இதே விலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று
வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கோடை மழை ஏமாற்றியதால் கருகிய நெற்பயிர்கள்**

திண்டுக்கல்:திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் கருகியதால், விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. பருவமழை பொய்த்ததால், கோடைமழையை நம்பி தாமதமாக பயிர்செய்த விவசாயிகளும் தற்போது சிக்கலில் உள்ளனர். கோடை மழை ஏமாற்றியதால், இறவை பாசனத்தை நம்பியும் பாதிக்கப்பட்டுள்ளனர்.கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் பயிர்களுக்கு போதிய அளவு நீர்பாய்ச்ச

முடியவில்லை.

மேலும் ஆழ்குழாய் கிணறுகளிலும் நிலத்தடிநீர்மட்டம் குறைவால் போதிய அளவு தண்ணீர் இறைக்க முடியாத சூழ்நிலையில், பயிர்களை காப்பாற்ற பலவகைகளில் முயன்றும் விவசாயிகள் தோல்வியையே கண்டுள்ளனர்.திண்டுக்கல் அருகே கள்ளிப்பட்டி பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள், தற்போது முற்றிலும் கருகத்துவங்கிவிட்டன. விளைநிலங்களில் ஈரப்பதமே இல்லாமல் வெடிப்பு தோன்றியுள்ளது. இனி மழை பெய்தாலும் நெற்பயிர்களை காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயி கவுண்டம்மாள் கூறுகையில்; ""கோடைமழையை நம்பி ஏமாந்துபோயுள்ளோம். ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்தது அனைத்தும் வீணாகிவிட்டது. லாரியில் தண்ணீர் வாங்கி ஊற்றி பயிர்களை காப்பாற்றலாம் என்றாலும், அதற்கும் வழியில்லாத நிலை உள்ளது. விவசாயத்தை நம்பி பணத்தை இழந்துதவிக்கிறோம்,'' என்றார்.

**வெங்காயத்தை விளைச்சலுக்கு முன் அகற்றிய விவசாயிகள்**

ஆண்டிபட்டி:வைகை அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால்,நீர்த் தேக்கப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட வெங்காயத்தை, விளைச்சலுக்கு முன்பே விவசாயிகள் அப்புறப்படுத்தி வருகின்றனர். வைகை அணை நீர் தேக்கப்பரப்பு 10 சதுர மைல் பரப்பில் பரந்து விரிந்துள்ளது. நீர் வற்றிய காலங்களில், சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி, சக்கரைப்பட்டி பகுதி விவசாயிகள் நீர் தேக்கப்பரப்பில் விவசாயம் செய்து கொள்வர். நீர் தேக்கப்பகுதியில் படிந்துள்ள வண்டல் விவசாயத்திற்கேற்றதாகும். உரம் ஏதும் இடாமலேயே விளைச்சல் அமோகமாக இருக்கும். கடந்த சில மாதங்களாக அணை நீர் மட்டம் குறைந்திருந்ததால் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயிகள் வெங்காயம், காய்கறி சாகுபடி செய்திருந்தனர். இந்த ஆண்டு வெங்காய விலை உச்சத்தில் இருந்ததால், விவசாயிகள் பலரும் வெங்காய சாகுபடி செய்திருந்தனர். தற்போது, அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் சாகுபடி செய்துள்ள நிலங்கள் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நீர்த் தேக்கப்பகுதியில்

சாகுபடி செய்த நிலங்களில் கிடைத்தவரை லாபம் என்பதை உணர்ந்த விவசாயிகள், முழு விளைச்சலுக்கு முன்பே வெங்காயத்தை அறுவடை செய்து வருகின்னர்.

**மானாவாரி பயிருக்கு தழைச்சத்து இட அறிவுரை**

தேனி:தேனி ஒன்றியத்தில் மக்காச்சோளம், சோளம், கம்பு அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் நெருக்கமாக உள்ள பயிர்களை களைந்து விட வேண்டும். செம்மண் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோள பயிருக்கு ஒரு எக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து, 65 கிலோ யூரியா, தொழு உரம் அல்லது மண்ணுடன் கலந்து இட வேண்டும்.
களிப்பாங்கான இடங்களில் ஒரு எக்டேருக்கு 20 கிலோ தழைச்சத்து 45 கிலோ யூரியா இட வேண்டும்.கம்பு பயிருக்கு 20 கிலோ தழைச்சத்து, 45 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும் என விவசாயத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

**போதிய விதை நெல் கையிருப்பு: கலெக்டர்**

சிவகங்கை:""மாவட்டத்தில்,தென்மேற்கு பருவ மழையை நம்பி, நெல் நடவு செய்வோருக்கு, தேவையான விதை நெல், 266 டன் வரை இருப்பு உள்ளதென," கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது: மாவட்டத்தில்,தென்மேற்கு பருவ மழை சராசரி 309 மி.மீ.,ல் இதுவரை, 23.77 மி.மீ., பதிவாகியுள்ளது. தொடர்ந்து ஆடிப்பட்ட விவசாயத்திற்கு, தென்மேற்கு பருவ மழை இன்னும் அதிகளவில் கைகொடுக்கும் என நம்புகிறோம். இந்த மழையை நம்பி, நெல், பயிறு வகை பயிர்களை நடவு செய்யும் பணிகளில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நடவுக்கு தேவையான விதை நெல் 266 டன் வரை விவசாய விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.விவசாயிகள், விதை நெல்லை கிலோ ரூ.5 மானியத்தில் பெறலாம். அதே போன்று பயறு வகையான உளுந்து விதை 6.8 டன் வரை இருப்பு உள்ளன. கிலோவிற்கு ரூ.12 மானியம் வழங்கப்படும். எண்ணெய் வித்து பயிரான

கடலை விதை 205 டன் இருப்பு உள்ளது. கிலோவிற்கு ரூ.12 மானியத்தில் தரப்படும். பயிர்களுக்கு தேவையான யூரியா 680; டி.ஏ.பி., உரம் 211; பொட்டாஷ் 290; காம்ப்ளக்ஸ் 255 டன் வரை உரங்கள், அந்தந்த தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள், விவசாய அலுவலகங்களில் இருப்பு உள்ளன. விவசாயிகள் இதனை பெற்று, பயன்பெறலாம், என தெரிவித்தார்.

**கிலோ ரூ.50 ஆக குறைந்தது வெங்காய விலை**

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் 100 ரூபாய்க்கு விற்ற வெங்காயம்,தற்போது 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் சுற்று பகுதிகளில் கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால், விவசாயிகள் வெங்காயம் பயிர் செய்வதை நிறுத்தினர். இதனால் திண்டுக்கல், தேனி மாவட்டத்திலிருந்து வெங்காயம் வந்தது.

கடந்த சில மாதங்களாக வரத்து இல்லாததால், பொள்ளாச்சி, திருப்பூர் பகுதிகளிலிருந்து வந்தது. இதனால் ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, ஆந்திரா மாநிலத்திலிருந்து, வெங்காயம் வரத்துவங்கியது. சுரண்டை,சின்னமனூர், ஒட்டச்சத்திரம் பகுதிகளில் வெங்காயம் அறுவடை துவங்கியுள்ளயது. இதானல் வெங்காயத்தின் விலை கிலோ 50 ரூபாயாக குறைந்துள்ளது.

வியாபாரி சுராங்கனி, ""கடந்த மாதம் பொள்ளாச்சி பகுதிகளிலிருந்து வெங்காயம் வந்ததால், கிலோ 100 ரூபாய்க்கு விற்பனையானது .தற்போது வரத்து அதிகமானதால், விலை குறைந்துள்ளது. வரும் காலங்களில் மேலும் குறைய வாய்ப்புள்ளது,'' என்றார்.

**தூய விதையாக சேமிக்க வேண்டும்விதை பரிசோதனை அலுவலர் தகவல்**

திருநெல்வேலி:"சேமிக்கும் விதையை தூய விதையாக சேமித்தல் அவசியம்' என விதைப்பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் தெரிவித்தார்.நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் அறிக்கை:நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், பிற

ரக கலவன் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. பயிர் சாகுபடிக்கு தேவையான முக்கிய இடுபொருட்களில் முதன்மையானது விதை. விதை தரமாக இருந்தால் மகசூல் அதிகரிக்கும்.

பயிர் அறுவடை முடிந்து கதிரடித்து பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதை குவியல்களில் இருந்து கிடைக்கும் விதைகள் உடனே விதைப்பதற்கு தயாராக இருக்காது. அந்த விதைகளுடன் மண், சிறுகற்கள், இலைகளின் துகள்கள், குச்சி, சாவி கலந்திருக்கும்.அறுவடை செய்யும் விதைகளை காய வைத்து சுத்திகரிப்பு நிலையம் சென்று சுத்திப்பணி செய்ய வேண்டும். குவியலில் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் பரிசோதிக்கப்படும் புறத்தூய்மை சோதனையின் போது தூய விதைகள், களை விதைகள், பிற தானிய விதைகள், உயிர்ப்பற்ற பொருட்கள் கலந்துள்ளனவா என கண்டறியப்படுகிறது.

நெல், பயறுவகை, சிறுதானியம், சூரியகாந்தி, பருத்தி பயிர்களுக்கு புறத்தூய்மை 98 சதவீதம் இருத்தல் அவசியம். சேமிக்கும் விதையை தூய விதையாக சேமித்தல் அவசியம்.இவ்வாறு விதைப்பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் தெரிவித்தார்.

**விவசாயிளுக்கு தரமான விதைகள்விதை சான்று இணை இயக்குனர் உத்தரவு**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் விதை சான்று பணிகளை மாநில விதை சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜன் ஆய்வு செய்தார்.நெல்லை மாவட்டத்தில் மத்திய விதை கிடங்கு விதை சுத்தி நிலையத்தை இணை இயக்குனர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சுத்தம் செய்யப்பட்ட விதைகளை மிதப்பு பரிசோதனை செய்து விதைகளின் சுத்திப் பணி மற்றும் விதை சுத்தி நிலைய பதிவேடுகளும் ஆய்வு செய்யப்பட்டன.நெல்லை விதை சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தை பார்வையிட்ட அவர் விதை சான்று அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தினர். விதை சான்று அலுவலர்கள் ஒவ்வொருவரும் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து சான்றளிப்பில் அதிக பரப்பளவில் பதிவு செய்து தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க உத்தரவிட்டார்.இதில் நெல்லை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர்

இளங்கோ, விதை பரிசோதனை அலுவலர் முகம்மது காசீம், நெல்லை விதை சான்று உதவி இயக்குனர் அசோக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கரும்பு டன் ரூ.3,000 என விலை நிர்ணயம்தி.மு.க., செயற்குழுகூட்டத்தில் தீர்மானம்**

ஈரோடு: அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்தால், கரும்பு விலையை உயர்த்தி டன்னுக்கு, 2,500 ரூபாய் வழங்குவோம் என தேர்தல் வாக்குறுதியின்போது, அ.தி.மு.க.,வினர் கூறிவிட்டு, இன்று வரை, 2,350 ரூபாய் வழங்குகின்றனர். விவசாயிகள் நலன் கருதி டன்னுக்கு, 3,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய நேற்றைய தி.மு.க., செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.ஈரோடு மணல்மேடு மாவட்ட தி.மு.க., தலைமை அலுவலகத்தில், மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் நடந்தது. மாநகர செயலாளர் குமார் முருகேஸ், மாவட்ட துணை செயலாளர் செல்லப்பொன்னி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். கடந்த, 17ம் தேதி சென்னையில் நடந்த தி.மு.க., நிர்வாகக்குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, சேதுசமுத்திர திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று முதல்வர் ஜெயலலிதாவின், அ.தி.மு.க., அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலத்தை திரும்ப பெறக்கோரியும், சேது சமுத்திர திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.இக்கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்தி, ஈரோடு மாவட்ட தி.மு.க., சார்பில், 8ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அ.தி.மு.க.,வினர் தேர்தல் வாக்குறுதியாக, ஆட்சிக்கு வந்தால், கரும்பு விலையை டன்னுக்கு, 2,500 ஆக உயர்த்தப்படும், என அறிவித்தனர்.

இன்று வரையிலும், டன்னுக்கு, 2,350 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. விவசாயிகள் நலன் கருதி, டன்னுக்கு, 3,000 ரூபாய் கரும்பு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சொட்டு நீர் பாசனத்தில் கரும்பு நடவு200 எக்டேர் சாகுபடி செய்ய ஏற்பாடு**

பவானி: பவானி வட்டார பகுதியில் உள்ள விவசாயிகள், இந்தாண்டு, 200 எக்டேர் கரும்பு, சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிட திட்டமிட்டுள்ளனர்.
பவானி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் நெல், மஞ்சள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக, அதிக அளவில் கரும்பு பயிரிட்டு வருகின்றனர். 12 மாதத்தில் அறுவடை செய்யப்படும் கரும்பானது, பவானி வட்டாரத்தில் உள்ள மொத்த விவசாய பரப்பான, 212 சதுர கிலோ மீட்டரில், கடந்த, 2012ம் ஆண்டு, 1,220 எக்டேர் பயிரிடப்பட்டு உள்ளது.அதேபோல், இந்தாண்டு, 200 எக்டேர் சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிட ஆவண செய்யப்பட்டு வருவதாக, வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
பவானி வட்டார பகுதியில் வெள்ளை, கரும்பு ரகமான கோ-24 போன்ற ரகங்களை விட, 353 ரகம் இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் பயிரிடுகின்றனர்.
அதேபோல், நீடித்த நிலையான கரும்பு பெருக்கு திட்டத்தின் மூலம், ஐந்து அடி இடைவெளி விட்டு, நாற்று நடப்பட்டு, அந்த விவசாய நிலத்துக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து கரும்பு பயிரிடப்பட்டால், அந்த விவசாயிக்கு ஒரு எக்டேருக்கு, 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இடுபொருட்கள் (5,000 நாற்று, நீரில் கரையும் உரம்) அரசு இலவசமாக வழங்கும், என பவானி வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு வினியோகிக்க 2.50 லட்சம் நாற்றுகள் தயார்**

ஊட்டி : ஊட்டி தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், விவசாயிகளுக்கு வழங்க, 2.50 லட்சம் தேயி லை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.
ஊட்டி அருகே, 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள, தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க, உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட் விதைகள், தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
ஆண்டுதோறும் ஜனவரி மாதம், உருளைக் கிழங்கு விதைகளை பெற சாகுபடி

துவங்கும்; கடந்தாண்டு மழை பெய்யாததால், கடந்த ஜனவரியில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. சில நாட்களாக பெய்து வரும் மழையை தொடர்ந்து, விதை உருளைக் கிழங்கு சாகுபடி செய்யும் பணி துவங்கியுள்ளது.

பண்ணை மேலாளர் கருணாகரன் கூறியதாவது:

பண்ணையில், ஆண்டுக்கு 60 டன் காரட் விதை, 90 டன் உருளைக் கிழங்கு, ஒரு டன் காரட் விதைகள், தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உருளைக் கிழங்கு விதை கிலோ 12.00 - 15.00 ரூபாய், பீன்ஸ் விதை ஒரு கிலோ 80 ரூபாய்-க்கு விற்கப்படுகிறது. தவிர, நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது.

இந்தாண்டு பருவ மழை சிறப்பாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் மத்தியில் விதைகளை வாங்குவதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.

தற்போது பண்ணையில், 2.50 லட்சம் தேயிலை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன; ஒரு நாற்று 4.00 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதில், 1.75 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கருணாகரன் கூறினார்.

### ரூ.1.40 கோடியில் நாற்று உற்பத்தி மையம்

ஊட்டி : ஊட்டி அருகே தும்மனட்டியில், 1.40 கோடி ரூபாய் செலவில், கார்னேஷன் நாற்று உற்பத்தி மையம் அமைப்பதற்கான, பூஜை நேற்று நடந்தது. நீலகிரி மாவட்டத்தில், ஏராளமான சிறு விவசாயிகள், கார்னேஷன் உட்பட கொய்மலர் சாகுப டியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு, தனியார் ஏஜென்சிகள் மூலம் வழங்கப்பட்டு வந்த தாய் செடிகள் தரமற்றவையாக இருந்ததால், தொழில் நலிவடைந்தது. விளைவாக, மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, ஊட்டி தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், 1.40 கோடி ரூபாய் செலவில், கார்னேஷன் நாற்று உற்பத்தி மையம் அமைக்கப்படவுள் ளது.

"இங்கு பசுமைக் குடில் அமைத்து, ஹாலந்து, ஸ்பெயின் நாட்டில் இருந்து கார்னேஷன் கட்டிங் (பல்பு) வாங்கி, கார்னேஷன் நாற்றுகளை உற்பத்தி செய்து, சாகுபடியாளர்களுக்கு வழங்க திட்டமிடப்பட் டுள்ளது; இப்பணிகள் ஆறு

மாதத்தில் முடிவடையும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பூஜை, மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில், ராஜ்ய சபா எம்.பி., அர்ஜூணன், ஊட்டி எம்.எல்.ஏ., புத்திச்சந்திரன் முன்னிலையில் நேற்று நடந்தது. தோட்டக்கலை துறை இணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) மணி, உதவி தோட்டக்கலை இயக்குனர் பிரகாசம், பண்ணை மேலா ளர் கருணாகரன், மலர் சாகுபடி சங்க தலைவர் விஸ்வநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஆடிப்பட்டத்தில் தவறும் சாகுபடிபெரும் கவலையில் விவசாயிகள்**

கரூர்: காவிரி மற்றும் அமராவதி ஆறுகளில் போதிய தண்ணீர் இல்லாத நிலையில், தென்மேற்கு பருவமழையும் ஏமாற்றி வருகிறது. இதனால், ஆடிப்பட்டத்தில் கரூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சின்ன வெங்காயம், நிலக்கடலை மற்றும் சிவப்பு எள் உள்ளிட்ட மானாவாரி பயிர்களை சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர்.கரூர் மாவட்டத்தில் ஜனவரி முதல் டிசம்பர் வரை ஆண்டு சராசரியாக 652.20 மி.மீட்டர் பெய்ய வேண்டும். கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை மற்றும் தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. வழக்கமாக மே மாத இறுதி அல்லது ஜூன் தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். ஆனால், கரூர் மாவட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் எதிர்பார்த்த அளவில் மழை பெய்யவில்லை. மே, ஜூன் மாதங்களில் சில நாட்கள் மட்டும் சுமாரான மழை பெய்தது.ஆண்டுதோறும் ஜூன் மாதம் மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். ஆனால், மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாததால், காவிரியாற்றில் இதுவரை குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை.

கரூர் மாவட்ட காவிரியாற்றில் போதுமான தண்ணீர் இல்லாமல் பாலைவனம் போல் காட்சியளிக்கிறது. திருப்பூர் மாவட்டம் உடுமலை பேட்டையில் உள்ள அமராவதி அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால், அமராவதி ஆற்றின் நிலையும் அதுதான். இதனால், கரூர்

மாவட்டத்தில் ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களின் சாகுபடியும் கேள்விகுறியாகி விட்டது.இதனால், கரூர் மாவட்ட விவசாயிகள் தென் மேற்கு பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஆனால், கரூர் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக பலமான சூறாவளி காற்று வீசி வருகிறது. இதனால் வாழை, முருங்கை உள்ளிட்ட மரங்கள் சாய்ந்து வருகிறது. சூறாவளி காற்றுக்கு வீட்டு கூரைகளும் தப்பவில்லை.கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து வீசி வரும் சூறாவளி காற்றால், ஜூலை மாதத்தில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையின் அளவு குறையும் அபாயம் உள்ளது. இதனால், மக்காச்சோளம், சின்ன வெங்காயம், நிலக்கடலை மற்றும் சிவப்பு எள் உள்ளிட்ட விளை பொருட்களை சாகுபடி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:தென்மேற்கு பருவமழையை நம்பி ஆண்டுதோறும் ஆடிப்பட்டத்தில், மக்காச்சோளம், சின்ன வெங்காயம், நிலக்கடலை, சிவப்பு எள் ஆகிய பயிர்களை சாகுபடி செய்வது வழக்கம். இதனால், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்யும் போது, நல்ல விலை கிடைக்கும். கடந்தாண்டை போல நடப்பாண்டும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், மானாவரி பயிர்களின் சாகுபடியை துவங்க முடியவில்லை.மேட்டூர் அணை மற்றும் அமராவதி அணைகளில் இருந்தும் விவசாயத்துக்கு இன்னமும் தண்ணீர் திறக்கப்பட வில்லை. கடந்தாண்டு போதிய மழை இல்லாதால், நடப்பாண்டு மானாவாரி பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. நடப்பாண்டும் போதிய மழை பெய்யாவிட்டால், வரும் ஆண்டில் மானாவாரி பயிர்களின் விலை மேலும் உயரக்கூடும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.வட மாநிலங்களில் மழை வெளுத்து வாங்கும் நிலையில், தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை தொடர்ந்து விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. இதனால், கடந்தாண்டை போல, நடப்பாண்டும் தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து, வருணபகவானின் கருணைக்காக கரூர் மாவட்ட விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**பசுமை குடில்களில் கத்தரி நாற்று: அதிக மகசூல் பெற வாய்ப்பு**

செய்யூர்: பசுமை குடில்களில், குழிதட்டு முறையில் விளைவிக்கப்படும் நாற்றுக்களை பயன்படுத்தி, கத்தரி சாகுபடி செய்வதன் மூலம், சாதாரண மகசூலை விட மூன்று மடங்கு மகசூல் கிடைக்கும் என, கீழ்மருவத்தூரைச் சேர்ந்த விவசாயி பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியதாவது: தோட்டக்கலை துறை அதிகாரிகள் வழங்கிய, சொட்டு நீர் பாசன முறையில், கத்தரி பயிரிட்டேன். இதற்காக, 75 சதவீத மானியத்தில், சொட்டு நீர் பாசன கருவிகளை பெற்றேன். எனது, 50 சென்ட் நிலத்தில், கத்தரி பயிரிட்டேன். 40 நாட்களில், காய்க்க தொடங்கி, 6 மாதங்களுக்கு காய்த்தது. இதன் மூலம், 1.50 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. தொடர்ந்து, இல்லீடு தேசிய வேளாண் நிறுவனம், 100 சதவீத மானியத்தில், 1.50 லட்சம் ரூபாய் செலவில், பசுமை குடில் அமைத்து கொடுத்தது. அதில், குழித்தட்டு முறையில், கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுகளை விட்டு, அவற்றை நடவு செய்துள்ளேன். பசுமை குடில்களில், குழித்தட்டு முறையில் வளரும் நாற்றுகளில் அதிக வேர் இருக்கும். இதனால், செடி, செழிப்பாகவும், விரைந்தும் வளர்ந்து, சாதாரண முறையை காட்டிலும், மூன்று மடங்கு கூடுதல் விளைச்சல் கிடைக்கும். இவ்வாறு, பாஸ்கர் கூறினார்.

**தழைச்சத்து பயிராக சித்தகத்தி: இயற்கை உரத்தில் விவசாயிகள் நாட்டம்**

ஆர்.கே.பேட்டை: செயற்கை உரங்களுக்கு மாற்றாக, இயற்கை உரங்களை பயிரிட விவசாயிகள் நாட்டம் காட்டுகின்றனர். இதற்காக, சதைப்பற்றுள்ள பயறு வகைகளை பயிரிட்டு வருகின்றனர்.

ரசாயன உரங்களின் விலை அதிகம் என்பது மட்டும் அல்லாது மண் வளத்தையும் பாதிக்கிறது. இதற்கு மாற்றாக உருவாக்கப்பட்டது தான் பசுந்தாள் உரம். மண்ணில் அங்ககப் பொருட்களை அதிகரிப்பதற்காக பயிரிடப்படும் பயிர்கள், பசுந்தாள் உர பயிர்கள் ஆகும். தக்கை பூண்டு, கொளிஞ்சி, சணப்பு, கிளைரிசியா,

அவரை, புங்கம், எருக்கு, சூரியகாந்தி உள்ளிட்டவை பசுந்தாள் உர பயிர்கள் ஆகும். பயிர்களில் நைட்ரஜனை நிலைநிறுத்துவது அல்லது மண்ணில் அங்கக பொருட்களை நிலைநிறுத்துவது, பசுந்தாள் உரமிடுதலின் குறிக்கோள் ஆகும். பயறு வகை பயிர்கள் அதிக சதைப்பற்று உடையவை. மிக குறுகிய காலத்தில் வளரும் தன்மை வாய்ந்தவை. இவை நன்கு வளர்ந்ததும், விதைகள் முற்றுவதற்கு முன்பாக, நிலத்தில் உழுதுவிட வேண்டும். இதன் மூலம், பயிர்களுக்கு தேவையான தழைச்சத்து நிலத்தில் சேர்க்கப்படுகிறது. தழைச்சத்து பயிர்கள், முதன்மை பயிர்களால் உறிஞ்சப்பட முடியாத, நிலத்தில் ஆழமான பகுதியில் உள்ள சத்துக்களை உறிஞ்சி தாவரங்களில் சேமிக்கின்றன. முதன்மை பயிர்களின் அறுவடை காலத்திற்கு பின், வறட்சியான காலத்தில் பயிரிடப்படுகிறது. விரைவாக வளர்ந்து, மண் வளத்தை பாதுகாக்கிறது. மேற்கண்ட காரணங்களால் விவசாயிகள், பசுந்தாள் உரத்திற்காக பச்சை பயறு வகை செடிகளை பயிரிட தொடங்கியுள்ளனர். இதுகுறித்து, விவசாயிகள் சிலர் கூறுகையில், "ஆர்.கே.பேட்டை, திருத்தணி பகுதியில் சித்தகத்தி செடிகள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. அனைத்து பருவத்திலும் பயிரிடலாம். 15 - 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும்; 45 முதல் 60 நாட்களில் அறுவடை செய்யலாம். விதைக்கான அறுவடை என்றால், பயிர் காலம், 130 நாட்கள். ஒரு ஏக்கரில், 600 கிலோ விதை கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு, 18 முதல், 20 டன் பசுந்தாள் உரம் கிடைக்கும்' என்றனர்.

**தண்ணீரின்றி காய்ந்த தென்னை மர தோப்புகள்**

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி அருகே தண்ணீரின்றி தென்னை மரங்கள் காய்வதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கள்ளக்குறிச்சி சுற்று பகுதியில் பல விவசாயிகள் நிலங்களில் கரும்பு மற்றும் தென்னை மரங்கள் சாகுபடி செய்துள்ளனர். பெரியசிறுவத்தூர் காட்டுகொட்டாய் சேர்ந்த லட்சுமி என்பவர் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு 2 ஏக்கரில் 250 தென்னை மர கன்றுகளை நட்டார். கடந்த 3 ஆண்டுகளாக விளைச்சல் இருந்தது. தற்போது கடும் வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைந்து பயிர்கள்

கருகின. பெரிய சிறுவத்தூர், காட்டனந்தல், புக்கரவாரி பகுதிகளில் தண்ணீரின்றி தென்னை மரங்கள் காய்கிறது. தென்னை மரங்க ளுக்கு நிவாரண உதவி பெற வேளாண் துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் மனு அளித்து வருகின்றனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வுதண்ணீர் திறக்க மக்கள் எதிர்பார்ப்பு**

நாமக்கல்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில், குடிநீர் தேவைக்காக, தற்போது திறந்து விடப்படும் தண்ணீரின் அளவை, 2,000 கனஅடியாக உயர்த்த வேண்டும் என, பொதுமக்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. அதனால், கர்நாடகா மாநிலத்தில் இருந்து, உபரி நீர், மேட்டூர் அணைக்கு திறந்து விடப்படுகிறது. அதன் மூலம், தற்போது, மேட்டூர் அணையின் நீர்மட்டம், 37 அடியாக உயர்ந்துள்ளது.குடிநீர் தேவைக்காக, மேட்டூர் அணையில் இருந்து, தினமும், 1,000 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. அவ்வாறு திறந்துவிடப்படும் தண்ணீர், மேட்டூர் அணையின் கீழ்பகுதியில் உள்ள வெண்டிபாளையம், ஊராட்சிக்கோட்டை, கொக்கராயன்பேட்டை தடுப்பணையில், தேக்கி வைக்கப்படுகிறது.அணை நிரம்பிய பின்னர், தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வழியோரத்தில் உள்ள பல்வேறு நீரேற்று பாசன சங்கங்கள், சாயப்பட்டறைகள், செங்கல்சூளை போன்ற சிறு தொழிற்சாலைகள், தங்களது பயன்பாட்டுக்காக, தண்ணீரை தொடர்ந்து உறிஞ்சி எடுக்கின்றனர்.அதேபோல், கூட்டுக் குடிநீர் திட்டங்கள், குடிநீர் தேவைக்காக, ஈரோடு, திருச்செங்கோடு, ராசிபுரம், தனியார் பேப்பர் மில், டி.என்.பி.எல்., காகித ஆலைகளும், தங்களது தேவைக்காக, தண்ணீர் உறிஞ்சி எடுத்து வருகின்றனர். அதன் காரணமாக, மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீர், ப.வேலூரை தாண்டிச் செல்ல முடிவதில்லை.அதனால், கரூர், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள காவிரிக்கரையோர கிராமங்களில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். அதனை கருத்தில் கொண்டு, மேட்டூர் அணையில் இருந்து, குறைந்தபட்சம், 2,000 கனஅடி தண்ணீர், குடிநீர் தேவைக்காக

திறந்துவிட, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது, பல்வேறு தரப்பினரின் கோரிக்கையாக உள்ளது.

**பருத்தி ஏலம்**

ராசிபுரம்: அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி வளாகத்தில், பருத்தி ஏலம் நடந்தது.ஏலத்தில், 60 கிலோ எடை கொண்ட, 210 சுரபி ரக பருத்தி மூட்டை அதிகபட்சமாக, 5,749 ரூபாய், குறைந்தபட்சமாக, 5,025 ரூபாய்க்கும், வியாபாரிள் ஏலம் எடுத்தனர்.மொத்தம், ஐந்து லட்சம் ரூபாய்க்கு பருத்தி மூட்டைகள் ஏலம் போனது. பருத்திக்கு உரிய விலை கிடைத்ததால், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 360 காசு**

நாமக்கல்: நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 373 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 13 காசு சரிந்து, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இரு தினங்களில், முட்டை விலை, 18 காசு சரிந்திருப்பது, பண்ணையாளர்களை கவலையடையச் செய்துள்ளது.இதுகுறித்து, என்.இ.சி.சி., நாமக்கல் மண்டல சேர்மன் டாக்டர் செல்வராஜ் கூறுகையில், ""முட்டை நுகர்வை அதிகப்படுத்த, விலை குறைக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், மற்ற மண்டலங்களில், முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும், விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது,'' என்றார்.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 380, பெங்களூரு, 365, மைசூரு, 368, ஹைதராபாத், 337, மும்பை, 375, விஜயவாடா, 325, கோல்கத்தா, 360, பர்வாலா, 300, டில்லி, 325.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கரும்புக்கு இழப்பீடு கோரி விவசாயிகள் மனு**

தர்மபுரி: வறட்சியால் காய்ந்த கரும்புக்கு, இழப்பீடு தொகை வழங்க கோரி, காய்ந்த கரும்புகளுடன், விவசாயிகள் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:மெணசி, பூதநத்தம், விழுதுப்பட்டி, குண்டல்மடு, ஜீவா நகர் உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் கரும்பு சாகுபடி செய்து வருகிறோம். கடந்தாண்டு போதிய பருவமழையில்லாததால், கிணறுகளில் தண்ணீர் வற்றியதால், சாகுபடி செய்த கரும்பு பயிர் காய்ந்து போனது.
கரும்பு சாகுபடிக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெறும் போது, அனைத்து விவசாயிகளுக்கும், ஏக்கருக்கு, 800 வீதம் இன்ஷூரன்ஸ் செய்யப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக இதே போல் கரும்பு சாகுபடிக்கு, இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டு வருகிறது.கரும்பை இன்ஷூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு, இழப்பீடாக முழு தொகையையும், இன்ஷூரன் செய்யாத கரும்பு விவசாயிகளுக்கு இழப்பீடாக ஏக்கருக்கு, 35 ஆயிரம் ரூபாய் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**"தானே' புயல் பாதித்த விவசாயிகளின் நிவாரணத் தொகை வங்கிகளில் முடக்கம்**

வடலூர்:"தானே' புயலில் சேதம் அடைந்த பயிர்களுக்கான நிவாரணத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் வங்கிகளில் முடங்கியுள்ளன.
2011ம் ஆண்டு வீசிய "தானே' புயலில் கடலூர் மாவட்டத்தில் நீண்டகால பயிரான மா, பலா, தென்னை உள்ளிட்ட ஏராளமான மரங்கள் முறிந்து விழுந்தன. ஒரு லட்சம் ஏக்கருக்கும் மேல் பயிர்கள் சேதடைந்தன.
புயலால் பாதித்த விவசாயிகளுக்கு அரசு சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன. ஆனால், பல்வேறு இடங்களில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்து, நிவாரணத் தொகை ஒதுக்கீடு செய்தும் அவை இன்னமும் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ளன.
கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் மட்டும் உரிய ஆவணங்கள்

இல்லாமல் உள்ளதாக காரணம் கூறி 9 லட்சம் ரூபாய் வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து குள்ளஞ்சாவடி அடுத்த கோ சத்திரத்தைச் சேர்ந்த விவசாயி முருகன் கூறியதாவது:

இரண்டரை ஏக்கரில் மரவள்ளி பயிர் செய்திருந்தேன். "தானே' புயலில் சேதமானது. தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து சேத மதிப்பை கணக்கிட்டனர்.

சேதமடைந்த பயிருக்கு நிவாரணமாக 6,000 ரூபாய் கணக்கிட்டு தெரிவித்தனர். அதற்கான சான்று வருவாய் துறை முலம் வழங்கப்பட்டது. 18 மாதங் களாகியும் இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை.

பலமுறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டும் முறையான பதில் இல்லை.

தோட்டக்கலைத் துறை அதிகாரியை அணுகி கேட்டபோது, பணம் மத்திய கூட்டுறவு வங்கியில் இருப்பதாக தெரிவித்தனர்.

மத்திய கூட்டுறவு அதிகாரியிடம் கேட்டபோது கடலூர், திருப்பாதிரிப்புலியூர் மத்திய பல்லவன் வங்கிக்குப் பணத்தை அனுப்பி விட்டதாக தெரிவித்தனர்.

பல்லவன் வங்கில் விசாரித்த போது, மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து 12 விவசாயிகளுக்கு வழங்க 70 ஆயிரம் ரூபாய் வந்துள்ளதாகவும், அவர்கள் வழங்கிய கசோலையில் மேலாளர் கையெழுத்து மற்றும் முறையான ஆவணங்கள் இல்லாததால் பணத்தை அப்படியே வைத்துள்ளதாக தெரிவித்தனர்.

இதேப்போன்று குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் மட்டும் உரிய ஆவணங்கள் இன்றி 9 லட்சம் ரூபாய் வங்கியில் முடங்கியுள்ளது.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள், நிவாரண பணத்தை உடனடியாக பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு விவசாயி முருகன் கூறினார்.

**தென்னை மரங்களை பார்த்து விவசாயிகள் உற்சாகம் : பருவமழையால் பசுமைக்கு மாறும் பயிர்கள்**

பொள்ளாச்சி :பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் தொடர் மழையால், பெரும்பாலான தென்னை மரங்களின் இலைகளின் நிறம் மாற்றமடைந்து
பசுமையாக காட்சியளிக்கின்றன. இதைப்பார்த்த விவசாயிகள் சந்தோஷத்தில் மூழ்கியுள்ளனர்.
பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புறபகுதிகளில் தென்னை விவசாயத்தை பிரதானமாகவும், மற்ற பயிர்களை இரண்டாவதாகவும் செய்து வருகின்றனர்.
தென்னை மரத்துக்கு வேர்ப்பகுதியில் அதிக அளவு தண்ணீர் பாய்ச்சினாலும், மேற் பகுதியில் மழைநீர் அவசியமானதாக கருதப்படுகிறது. மழை நீர் மேலே விழுவதால் தென்னை மரத்தின் பக்க இலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
பொள்ளாச்சி வடக்கு மற்றும் தெற்கு, ஆனைமலை ஒன்றியத்துக்குட்பட்ட கிராமங்களில் 40,000 எக்டேர் பரப்பளவில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தென்னையிலிருந்து தேங்காய், மஞ்சி, கொப்பரை, வெல்லம், கருப்பட்டி உள்ளிட்ட ஏராளமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
கடந்த சில ஆண்டுகளாக, பொள்ளாச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் சரிவர பருவமழை பெய்யாததால், பெரும்பாலான பகுதிகளில் தென்னைமரங்கள் காய்ந்து போயின. இதனால் தென்னை விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். தென்னை மரங்கள் கருகி சாய்வதை பார்த்த விவசாயிகள் சிறிதேனும் சாரல் மழை பெய்யாதா? என்று ஏக்கப்பார்வை பார்த்தனர்.
அந்த சமயத்தில், வெயில் மற்றும் வறட்சியின் காரணமாக பல ஆயிரம் தென்னை மரங்கள் வறட்சியின் பிடியில் சிக்கின. பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை விவசாயிகள் வெட்டி அப்புறப்படுத்தினர். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மனந்தளராமல் அப்படியே விட்டுவிட்டனர்.
அந்த தருணத்தில் வருண பகவான் கருணை காட்டியதால், பெரும்பாலான தென்னை மரங்களுக்கு மழைநீர் போனதால் மீண்டும் வளரத்துவங்கியது.

கடந்த ஒரு மாத காலத்தில் பெய்த கனமழைக்கு, இவை நல்ல வளர்ச்சியை பெற்றுள்ளன. காய்ந்திருந்த தென்னை மரங்கள் பசுமையாக பச்சை பசேல் என்று காட்சியளிக்கிறது. இதைப்பார்க்கும் போது விவசாயிக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான விவசாயிகள் தென்னை மரம் வளர்ந்து பருவத்துக்கு வந்து தென்னம்பாளை விட்டால் அந்த மரம் நல்ல விளைச்சலைக்கொடுக்க வேண்டும் என்று கருதி அம்மரத்துக்கு மஞ்சள் திலகமிட்டு பூக்களை அணிவித்து பொங்கல் வைத்து வழிபாடு செய்வது வழக்கம்.

தற்போது காய்ந்து போன மரம் மீண்டும் உயிர் பெற்றதால் அதே நடைமுறையை பின்பற்றி பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடுகளை விவசாயிகள் செய்தனர்.

இது குறித்து பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் கூறுகையில், "தொடர்ந்து மழை பெய்து வருவது சந்தோஷத்தை கொடுக்கிறது. எப்போதும் மேகமூட்டத்துடனும், அவ்வப்போது சாரல்மழையும் கனமழையும் பெய்வது மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதே நிலை தொடர வேண்டும்' என்றனர்.

**விவசாயிகளுக்கு வினியோகிக்க 2.50 லட்சம் நாற்றுகள் தயார்**

ஊட்டி : ஊட்டி தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், விவசாயிகளுக்கு வழங்க, 2.50 லட்சம் தேயி லை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன.

ஊட்டி அருகே, 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள, தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்ணையில், மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க, உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட் விதைகள், தேயிலை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆண்டுதோறும் ஜனவரி மாதம், உருளைக் கிழங்கு விதைகளை பெற சாகுபடி துவங்கும்; கடந்தாண்டு மழை பெய்யாததால், கடந்த ஜனவரியில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. சில நாட்களாக பெய்து வரும் மழையை தொடர்ந்து, விதை உருளைக் கிழங்கு சாகுபடி செய்யும் பணி துவங்கியுள்ளது.

பண்ணை மேலாளர் கருணாகரன் கூறியதாவது:

பண்ணையில், ஆண்டுக்கு 60 டன் காரட் விதை, 90 டன் உருளைக் கிழங்கு, ஒரு

டன் காரட் விதைகள், தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உருளைக் கிழங்கு விதை கிலோ 12.00 - 15.00 ரூபாய், பீன்ஸ் விதை ஒரு கிலோ 80 ரூபாய்-க்கு விற்கப்படுகிறது. தவிர, நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது.

இந்தாண்டு பருவ மழை சிறப்பாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் மத்தியில் விதைகளை வாங்குவதில் ஆர்வம் அதிகரித்துள்ளது. தற்போது பண்ணையில், 2.50 லட்சம் தேயிலை நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன; ஒரு நாற்று 4.00 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதில், 1.75 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கருணாகரன் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.07.2013**

**நெல் கொள்முதல் விலை குவின்டாலுக்கு ரூ2,000 விவசாயிகள் வலியுறுத்தல்**

தஞ்சை, : தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் சாமி.நடராஜன் தெரிவித்துள்ளது:

இந்த ஆண்டுக்கான விவசாய விளைபொருட்களுக்கு கொள்முதல் விலையை தீர்மானிப்பதற்கான மத்திய அமைச்சரவை கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அதில் நெல்லுக்கான கொள்முதல் விலையை இந்த ஆண்டு குவின்டாலுக்கு ரூ.60 மட்டுமே உயர்த்தி அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு நெல் குவின்டாலுக்கு ரூ.1.250 கிடைத்தது. தற்போது உயர்த்தியுள்ள விலையால் ரூ.1.310 மட்டுமே விலை கிடைக்கும்.

ஏற்கனவே விவசாயம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலை யில் மத்திய அரசு தொட ர்ந்து உரத்திற்கான மானி யத்தை குறைத்து வருவதால் உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 50 கிலோ மூட்டை டிஏபி உரம் ரூ.1,250 முதல் ரூ.1,400 வரை விற்கப்படுகிறது. பொட்டாஷ் ரூ.800 முதல் ரூ.900 வரை விற்கப்படுகிறது.

இவ்வாறு விவசாயிகள் பயன்படுத்தும் உரம், பூச்சி மருந்து விலை உயர்வோடு விவசாய வேலையாட்களின் கூலியும் அதிகரித்துள்ள சூழ்நிலையில் நெல்லுக்கான விலை உயர்வு போதுமானதாக இல்லை. கோதுமை, பருத்தி, பயறு வகைகளுக்கு விலை உயர்த்தியுள்ளதைப்போல் மத்திய அரசு நெல் குவின்டாலுக்கு ரூ.1,750 விலை தீர்மானிக்க வேண்டும். மேலும், மாநில அரசு தனது பங்காக நெல் குவின்டாலுக்கு ரூ.250 ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் நெல் கொள்முதல் விலையை குவின்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வழங்கினால்தான் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும். எனவே, மத்திய, மாநில அரசுகள் நெல்

கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மண்பரிசோதனைசெய்துஅதிகமகசூல் பெறவேளாண்துறைவேண்டுகோள்**

ஆண்டிபட்டி, : நிலங்களில் மண்மாதிரி எடுத்து அதிக மகசூல் பெற வேண்டும்¢ என வேளாண்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து ஆண்டிபட்டி வேளாண் உதவி இயக்குனர் கூறியதாவது:

ஆண்டிபட்டி பகுதியில் தற்போது பெரும்பாலான பயிர்கள் அறுவடை முடிந்து வேளாண் நிலங்கள் ஓய்வாக இருக்கும் இத்தருணத்தில் மண்மாதிரி எடுத்தல் ஒர் அவசியமான பணியாகும். எனவே விவசாயிகள் அனைவரும் நல்ல விதை தேர்வு செய்தும், உரங்கள் இட்டும் பூச்சி மருந்துகள் இட்டும் நாம் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காத நிலை இருந்தால் தங்கள் நிலத்தில் மண்ணையும் பாசன நீரையும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

மண் மற்றும் பாசன நீரில் உள்ள பிரச்னைகளை தெரிந்து அவற்றை சரி செய்தும், அதற்கேற்ப பயிர்களை தேர்வு செய்து கொள்ள வேண்டும். மண்ணில் உள்ள பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களின் அளவறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரமிடுங்கள். அதனால் உரச்செலவில் சிக்கனம் செய்வதோடு நல்ல விளைச்சலும் பெறலாம்.

மண் மாதிரி எடுக்கும் முறை:

ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் இருந்து மண் எடுக்க வேண்டும். தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகளுக்கு அரை அடி ஆழத்திலும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறிகளுக்கு முக்கால் அடி ஆழத்திலும், தென்னைக்கு 3 அடி ஆழத்திலும், பழ மரங்களுக்கு 3 முதல் 6 அடி ஆழத்திலும் மண் எடுக்க வேண்டும். சேகரித்த மண்ணை பங்கீட்டு முறையில் அரை கிலோ மண் வரும் வரை பங்கீடு செய்து துணிப்பை அல்லது பாலீதீன் பையில் சேகரிக்கவும்.

மண் மாதிரி எடுக்கக்கூடாத இடங்கள்: மரநிழல், வரப்பு வயலோரம், தண்ணீர் பாயும் பகுதி, எரு கொட்டிய இடம், பயிர் வயலில் இருக்கும்போது எடுக்கக் கூடாது. மேலும் நுண்ணூட்ட மண் ஆய்வுக்கு மாதிரி சேகரிப்பதற்கு மண்வெட்டி,

தட்டு போன்ற உலோகப்பொருட்கள் பயன்படுத்தக்கூடாது. மரக்குச்சி கொண்டு மண் எடுக்க வேண்டும். பாசனநீர் பரிசோதனைக்கு மோட்டாரை 10 அல்லது 15 நிமிடங்கள் ஒடவிட்டு ஒரு லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். சுத்தமான கண்ணாடி அல்லது பாலீதீன் பாட்டிலை உபயோகிக்கவும்.

மண்மாதிரி ஆய்வு செய்ய கட்டண விவரம்: மண்மாதிரி பேரூட்டம் ஆய்வு செய்ய ஒரு மாதிரிக்கு 10 ரூபாயும், நுண்ணூட்டம் ஆய்வு செய்ய ஒரு மாதிரிக்கு 10 ரூபாயும், பாசனநீர் ஆய்வு செய்ய 20 ரூபாயும் வசூலிக்கப்படும். மேற்கண்டவாறு மண்மாதிரிகளை சேகரித்து தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர்களிடமோ அல்லது தேனியில் உள்ள மண் பரிசோதனை நிலையத்திலோ கொடுத்து பயன் பெறுமாறு ஆண்டிபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**காபி பயிரில் காய் துளைப்பான் பூச்சியை கட்டுப்படுத்தும் வழிகள்**

ஏற்காடு, : ஏற்காடு மலைப்பகுதியில் நடப்பாண்டு காபி பயிரில் காபி காய்துளைப்பான் பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது. ஒருங்கிணைந்த தடுப்பு நடவடிக்கைகள் மூலம் பாதிப்பை தடுக்கலாம் என்று காபி வாரியம் அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து ஏற்காடு காபி வாரிய அதிகாரிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

ஏற்காடு மலைப்பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் காபி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இரண்டு முதல் 3 முறை காபியில் பூக்கள் பூத்ததால் (ரன்னிங் பிளாசம்) காய்துளைப்பான் பாதிப்பு அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளது. தோட்டங்களில் உள்ள வேலிக்காபி, மரக்காபி என்று அழைக்கப்படும் எக்சல்சா வகை காபி மரங்களில் ஆண்டு முழுவதும் காய்கள் அறுவடை செய்யப்படாமல் இருந்ததும் இந்த பூச்சியின் பாதிப்பை தீவிரமடைய செய்துள்ளது.

இந்த பூச்சி, காபி காய்களின் நுனிப்பகுதியில் துளையிட்டு உள்பகுதியில் காத்துக் கொண்டிருக்கும். காபி பருப்பு முதிர்ச்சி அடையத்தொடங்கும் சமயத்தில் மேலும் உட்புறமாக சென்று 40 முதல் 50 முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள்

புழுவாக வளர்ந்து பிறகு வண்டாக முதிர்ச்சி அடைந்து ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் வெளியே பறந்து வந்து புதிய காபி காய்களில் ஓட்டை போட்டு பாதிப்பை ஏற்படுத்தும்.

காபி விவசாயிகள் ரசாயன பூச்சிக்கொல்லியான குளோரிபைரிபாஸ் 20 இசி மருந்தை (600 மில்லிகிராம்) 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 200 மில்லி ஒட்டும் திரவத்தில் சேர்த்து தெளிப்பான் மூலம் காய்கள் மீது நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இந்த மருந்தை ஜூன், ஜூலை மாதங்களில் அடிப்பதால் 70 முதல் 80 சதவீதம் வரை காபி காய் துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.

காபி செடிகளில் கடந்த ஆண்டு விடுபட்ட பழங்கள் மற்றும் அறுவடையின் போது கீழே விழுந்த தரைக்கொட்டைகளை உடனடியாக அகற்றுதல், முழுமையாக காபி பழங்களை அறுவடை செய்தல். மிதமான நிழலை காபி தோட்டங்களில் பராமரித்தல், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளுதல். நிர்ணயிக்கப்பட்ட அளவு ஈரப்பதம் வரும் வரை உலர்த்துதல்.

தோட்டங்களில் உள்ள எக்சல்சா வகை காபி மரங்களை வெட்டி அகற்றுதல் போன்ற ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை கடைபிடிப்பதன் மூலம் காய் துளைப்பான் பூச்சியை முழுமையாக கட்டுப்படுத்தலாம். மேலும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் உதவி தேவைப்படுவோர் ஏற்காடு காபி வாரியத்தை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு காபி வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாய கடன் முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டும் குறைதீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை

திருச்சி, : விவசாய கடன் முழுவதையும் தள்ளு படி செய்ய வேண்டு மென குறைதீர் கூட்டத் தில் விவசாயிகள் கோரி க்கை விடுத்தனர்.

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் ஜெய ஸ்ரீ தலைமையில் நடந்தது. டிஆர்ஓ தியாகராஜன், வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் முன் னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயி கள் சங்க மாவட்ட செய லாளர் அயிலை சிவசூரி யன்

பேசுகையில், விதை, உரம், பூச்சி மருந்து விலை உயர்வு, கூடுதல் சாகுபடி செலவு, கட்டுப்படியாகாத விலை, கடன் சுமையால் பெரும்பாலான விவசாயி கள் விவசாய தொழிலை கைவிட்டு வரும் நிலையில் கடன் ஒத்திவைப்பு என்பது தீர்வாகாது. மத்திய, மாநில அரசுகள் தமிழகம் முழு வதும் கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள கடனை தள்ளுபடி செய்ய வேண் டும் என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் புலியூர் நாகராஜன் பேசு கையில், மத்திய அரசு வங்கி நிறுவனங்கள், விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டுள்ள னர். ஜப்தி நடவடிக்கை மேற்கொள்வது மனவேதனையை ஏற்படுத்தியுள் ளது. மத்திய அரசு, விவ சாய கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண் டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாசிலாமணி பேசுகையில், மழை, சூறாவளி காற்றால் பாதிக்கப்பட்ட வாழை பயிர்களை வேளாண் துறையினரால் கணக்கிட்டு 3 மாதமாகியும் இதுவரை எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. இனியும் காலம் தாழ்த்தாமல் உற் பத்தி செலவை கணக்கில் கொண்டு வாழை விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டு றவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற் றுள்ள கடன்களை தள்ளு படி செய்து புதிய கடன் வழங்க வேண்டும் என்றார்.

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்க துணை செயலாளர் சுப்ரமணியம் பேசுகையில், உய்யக்கொண்டான் வாய் க் கால் 517 மைலில் உள்ள நங்கவரம் கீழ் போக்கி பழுது அடைந்துள்ளதை புதுப்பித்து தரவேண்டும். திருச்சி மாவட்ட காவிரி பாசன 17 வாய்க்கால்களை நவீனப்படுத்தி தர நிதி ஒதுக்க மாநில அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந் துரை செய்ய வேண் டும் என்றார். தமிழக ஏரி மற் றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் பேசுகையில், மழை இல்லாத காரணத் தாலும், காவிரிநீர் கிடை க்காத காரணத்தாலும் திருச்சி வறட்சி மாவட்ட மாக அறிவிக்கப்பட்டது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி மற் றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயி கள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண் டும் என்றார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு குழுக்கள் அமைத்து மகளிர் செயல்பட்டால் அதிக லாபம் வேளாண் இணை இயக்குனர் தகவல்**

திருச்சி, : நாட்டுக் கோழி வளர்ப்பில் பெண் கள் குழுக்கள் அமைத்து செயல்பட்டால் அதிக லாபம் பெறலாம் என்று வேளாண் இணை இயக்குனர் தெரிவித்தார்.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் தளுதாளப்பட்டியில் அட்மா திட்டத்தின்கீழ் கூண்டு முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணை பள்ளி பயிற்சி நிறைவு விழா நடந்தது. ஊராட்சி தலைவர் சேட்டு தலைமை வகித்தார். பெண்களுக்கு இடுபொருட்கள் வழங்கி வேளாண் இணை இயக்குனர் குருராஜசிங் பேசியதாவது: கூண்டு முறையில் நாட்டுக்கோழி அதிகளவில் வளர்க்க வேண்டும். கற்று கொண்ட புதிய தொழில்நுட்பங்களை சக பெண்களிடம் எடுத்துக்கூற வேண் டும். குழு அமைத்து செயல்பட்டால் இன்னும் அதிக லாபம் பெறலாம்.

வேளாண் துணை இயக்குனர் சந்திரசேகரன் முன் னிலை வகித்து பேசுகையில், இந்த பண்ணை பள்ளி 6 நாட்கள் நடந்தது. இதே போல் மற்ற வட்டாரங்களி லும் பெண்களுக்கு என்றே இதுபோன்ற பள்ளிகள் இந்தாண்டு அதிகளவில் நடத்தப்பட உள்ளது. அட்மா திட்டத்தின்கீழ் சுற்றுலாக்கள், கண்காட்சிகள், முகாம் ஆகியவை அமைக்கப்பட உள்ளது. விவசாயிகள் வேளாண் மற்றுமல்லாது வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை பராமரிப்பு, பட்டுபூச்சி வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற வேளாண் சார்ந்த அனைத்து தொழில்நுட்பங்கள் அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.

கூண்டு முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் மற் றும் நோய் கட்டுப்பாடு பற்றி திருச்சி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி ஆராய்ச்சி மைய தலைவர் லூர்துரீத்தா பெண்களுக்கு விளக்கம் அளித்தார். முன் னதாக பயிற்சியில் கலந்து கொண்ட 28 கிராம பெண்களுக்கு நாட்டு கோழிகளு க்கு தேவையான உணவுகள், குருணை வடிவிலான தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் ஜெய பாலன் நன்றி கூறினார்.

## கண்டலேறுவில் இருந்து  தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பு



சென்னை: ஆந்திர,தமிழக நதிநீர் ஒப்பந்தப்படி ஆந்திர அரசு, தமிழகத்துக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரவேண்டும். இதில், 3 டிஎம்சி சேதாரம் போக கண்டலேறு அணையில் இருந்து ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டிஎம்சியும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சியும் வழங்க வேண்டும்.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகள் வறண்டுள்ளதால் தண்ணீர் திறக்கும்படி ஆந்திர அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை விடுத்திருந்தது. அதன்படி நேற்று மாலை 4.30 மணிக்கு கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 200 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.07.2013**

## கோவை மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததால் 36 குளங்கள் நிரம்பவில்லை இந்த மாதம் 60 மில்லி மீட்டர் மழை பெய்ய வாய்ப்பு

கோவை,

கோவை மாவட்டத்தில் வால்பாறை பகுதிகளை தவிர மற்ற பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் குளங்களுக்கு நீர்வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 36 குளங்கள் இன்னும் நிரம்பவில்லை. வரும் நாட்களில் சராசரி மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>தென்மேற்கு பருவமழை</u>

கோவை மாவட்டம் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை நம்பி உள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால் நொய்யல் ஆற்று வழித்தடங்களில் உள்ள 36 குளங்களுக்கு தண்ணீர் வரத்து இல்லாமல் குளங்கள் வறட்சியாகும் நிலைக்கு தள்ளப்பட்டது.

குளத்து பாசனத்தை நம்பி இருந்த 15 ஆயிரம் ஏக்கர் நிலமும், நிலத்தடி நீரை நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது தென்மேற்கு பருவமழை காலமாகும். கடந்த மாதத்தில் வால்பாறை பகுதியில் அதிக அளவு மழை பெய்ததால் சோலையார் அணை நிரம்பியது. ஆழியார், திருமூர்த்தி அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

<u>குளங்கள் நிரம்பவில்லை</u>

கடந்த மாதம் பெய்த மழையின் மூலம் நொய்யல் வழித்தடத்தில் உள்ள உக்குளம் மட்டும் 90 சதவீதம் அளவுக்கு நிரம்பி உள்ளது. புதுக்குளம், கொல்ராம்பதி குளம் 60 சதவீதம் அளவுக்கும், நரசாம்பதி குளம் 35 சதவீதம் அளவுக்கும், கிருஷ்ணாம்பதி குளம் 25 சதவீதம் அளவுக்கும் தண்ணீர் வந்துள்ளது. இதன்பின்னர் போதிய மழை இன்னும் பெய்யாததால் உக்கடம் பெரியகுளம், குறிச்சி குளம், குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர் உள்பட 31 குளங்கள் தொடர்ந்து தண்ணீர் வரத்து இன்றியே காணப்படுகின்றன.

இதுகுறித்து குளங்கள் பராமரிப்புக்கான பொதுப்பணித்துறை அதிகாரி ஜெயப்பிரகாஷ் கூறும்போது, கோவை மாவட்டத்தில் பரவலாக சராசரி மழை பெய்யாததால் நொய்யல் ஆற்றின் வழித்தடங்களில் உள்ள 36 குளங்களும் இன்னும் நிரம்பவில்லை. குளங்கள் நிரம்பினால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். தற்போது கோவை உள்ளிட்ட சில பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 600 அடிக்கும் கீழ் சென்றுவிட்டது. தென்மேற்கு பருவமழை மேலும் எதிர்பார்க்கப்படுவதால் குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது என்று தெரிவித்தார்.

கோவை வேளாண்பல்கலைக்கழக வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி கீதா கூறியதாவது:–

167 மில்லிமீட்டர்

கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு செப்டம்பர் மாதம்வரை 167 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டும். கடந்த ஜூன் மாதம் 42.8 மில்லி மீட்டர் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 54.5 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் 2.5 மில்லி மீட்டர் மழை பதிவானால் அதனை மழை நாளாக கருதப்படுகிறது. இதன்படி கடந்த மாதத்தில் 6 நாட்கள் மழை நாட்களாக பதிவாகியுள்ளது.

இந்த மாதம் 60 மில்லி மீட்டர் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வேளாண்பல்கலைக்கழக வானிலை ஆராய்ச்சி பிரிவு அதிகாரி கீதா கூறினார்.

கோவை மாவட்டத்தில் வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் மட்டும் பலத்த மழை பெய்துள்ளது. கோவை நகரம் உள்ளிட்ட உள்பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் குளங்களுக்கு நீர்வரத்து குறைவாக இருந்தது. இந்த மாதம் போதிய மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால் குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>சிறுவாணியில் 16½ அடி</u>

சிறுவாணி பகுதியில் பெய்த மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் மள,மள என்று 16½ அடி அளவுக்கு உயர்ந்தது. சிறுவாணி பகுதியில் வரும் 3 நாட்களுக்குள் மழை எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை காலத்தில் போதிய அளவு மழை பெய்து 50 அடி நீர் மட்டத்தை எட்டும் வாய்ப்புள்ளதாக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.